# வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு - பாடம் - 1

வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு என்ற பாடம் நம் வாழ்விற்கு தேவையான ஆசீர்வாதமான ஓர் பாடமாகும். நீங்களும், நானும் ஓர் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வை வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம். ஓர் சாதாரண கிறிஸ்தவ வாழ்வை வாழ்வதற்கு நாம் அழைக்கப்படவில்லை. ஓர் வெற்றியுள்ள, ஒரு பரிபூரணமான வாழ்வை வாழ நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். இயேசு கிறிஸ்து இதை கூறும்போது இவ்விதமாய் சொல்லுகின்றார், நாம் அதை யோவான் எழுதின சுவிசேஷத்தில் இருந்து வாசிக்கிறோம். யோவான் 10:10 இவ்விதமாய் கூறுகிறது, "நானோ அவைகளுக்கு ஜீவன் கொடுக்கவும், பரிபூரணப்படவும் வந்தேன்" என்று சொல்லுகிறார். அதாவது ஜீவன் இருக்கவேண்டும், அது பரிபூரணப்படவேண்டும் என்று சொல்லுகிறதை சற்று நீங்கள் கவனிக்க வேண்டும். வெறும் ஜீவனைக்கொண்டு வாழ்வது பெரும் முயற்சி அல்ல, அதாவது ஒரு கிறிஸ்தவனாய் வாழ்வது பெரிய விஷயம் அல்ல. பரிபூரணம் உள்ள ஜீவனை உடையவனாய் நீங்களும், நானும் வாழவேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். உயிர் இருக்கிறது. ஆனால் அதைக் கொண்டு பிரயோஜனம் இல்லை. நாம் ஒரு பிரயோஜனம் உள்ள வாழ்வை வாழ வேண்டும்.

சாது சுந்தர் சிங் கூறும்போது ஒருவன் மருத்துவமனையில் படுக்கையில் இருக்கிறான். அப்பொழுது ஒரு பாம்பு வருகிறது. ஜன்னல்வழியே வருகின்ற பாம்பு படம் எடுத்து நிற்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அவனுக்குள் ஜீவன் இருக்கிறது. ஆனால் அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அந்த பாம்பை துரத்தவோ, அங்கே பாம்பு ஒன்று இருக்கிறது என்று சொல்லவோ, அல்லது எழுந்து ஓடவோ அவனால் முடியவில்லை. அதை பார்த்துக்கொண்டிருக்கிறான், ஆனால் எந்த செயலையும் அவனால் செய்ய முடியாத அளவுக்கு படுத்துக்கிடக்கிறான் என்று ஒரு மனிதனை சுட்டிக்காட்டி கருத்து தெரிவிக்கிறார். ஆனால் உலகில் பலர் இப்படித்தான் இருக்கிறார்கள். உயிர் இருக்கிறது, ஆனால் அந்த ஜீவனால் அவருக்கும் பிரயோஜனம் இல்லை, மற்றவர்களுக்கும் பிரயோஜனம் இல்லை என சாது சுந்தர் சிங் விளக்குகிறார்.

அந்த மருத்துவமனையில் படுத்திருந்த மனிதனால் அந்த பாம்பை துரத்தவும் இயலவில்லை, பாம்பு இருக்கிறது என்று சொல்லவும் இயலவில்லை. அதற்கு

தப்பித்து கொள்ளவும் இயலவில்லை. அதைப்போலத்தான் பலர் இன்று இருக்கிறார்கள். ஆனால் பரிபூரணமான ஜீவன் உள்ளவர்களாய் யார் வாழ்கிறார்களோ, அவர்கள், அவர்களுக்கும் பிரயோஜனமாய் இருப்பார்கள், மற்றவர்களுக்கும் பிரயோஜனமாய் இருப்பார்கள் என்று இயேசு கூறிய இவ்வசனத்திற்கு அவர் இவ்விதமாய் விளக்கம் தெரிவிக்கின்றார்.

பிரியமானவர்களே நீங்களும், நானும் வெறும் கிறிஸ்தவர்களாய், வெறும் ஜீவனை உடையவர்களாய் வாழ்வது பெரிய விஷயம் இல்லை. பரிபூரணமான ஜீவனை உடையவர்களாய் வாழவேண்டும். ஒரு வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வை வாழ வேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். தேவன் எதிர்பார்க்கிற வாழ்விற்கு உங்களை அர்ப்பணிக்க வேண்டும் என்பதற்கு இந்த பாடம் உங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்று அநேகர் வெறும் பெயரளவு கிறிஸ்தவர்களாய் இருக்கின்றார்கள். சிலர் ஆவிக்குரிய திருச்சபைக்கு செல்கிறேன் என்கிறார்கள். ஆனால் அவ்விதமாய் வாழவில்லை. அவர்கள் அங்கேயும் சடங்காச்சாரமாய் ஜெபிக்கிற ஓர் இடத்திற்கு வந்துவிடுகிறார்கள். நான் சொல்வது சபையிலே பிரச்சனை இல்லை, மக்கள் எவ்விதமாய் பதில் கொடுக்கிறார்கள் என்பது தான் முக்கியம். அநேக சபைகள் நன்றாகத்தான் நடக்கிறது. மக்கள் அதை சரியாக புரிந்து கொள்ளாத இடத்தில் இருக்கிறார்கள். ஆகவே ஒரு ஜீவனுள்ள வாழ்வை வாழாதவர்களாய், ஒரு தோல்வியான வாழ்வை கிறிஸ்தவர்கள் வாழ்கிறார்கள். ஆனால் நீங்களும், நானும் ஒரு வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வை வாழ கர்த்தர் விரும்புகிறார். அந்த வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு சாத்தியமே என்பதை நாம் சிந்திக்க இருக்கின்றோம். வெற்றியுள்ள வாழ்வை நீங்களும், நானும் புரிந்துகொள்ள வேண்டும். இன்றைய நாளிலே வெற்றியுள்ள வாழ்வு என்றாலே, தவறாக புரிந்து கொள்ளுகிற நிலைக்கு வந்து விட்டார்கள். தாங்கள் விரும்பியது கிடைத்து விட்டால் அது வெற்றியுள்ள வாழ்வு என கருதுகிறார்கள். நான் குறிப்பிட்ட காரியத்திற்காய் ஜெபித்துக் கொண்டிருந்தேன், கர்த்தர் ஒரு மாபெரும் வெற்றியைத் தந்து, அந்த வீட்டை தந்து விட்டார். நான் ஒரு வேலைக்காய் ஜெபித்துக்கொண்டிருந்தேன், அந்த வேலையை கொடுத்து மாபெரும் வெற்றியை தந்து விட்டார் என சாட்சி சொல்கிறதை நீங்கள் கேட்டிருக்கலாம்.

பிரியமானவர்களே, நீங்கள் விரும்பினது, நம்முடைய ஆசைகள் தேவனால் நிறைவேற்றப்படுகிறது வெற்றி என்பதனை மட்டும் நாங்கள் போதிக்கிற கிறிஸ்தவ

வாழ்வ் அர்த்தப்படுத்தவில்லை. அதை நான் உங்களுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அது ஆவிக்குரிய விதத்திலே ஒரு பகுதியாக இருக்கலாம். உங்கள் விருப்பங்களை நிறைவேற்றுவது தேவன்தான், இல்லையென்று சொல்லவில்லை. நீதிமான் விரும்புவது அவனுக்கு கொடுக்கப்படும் என்று வேதம் சொல்லுகிறது. ஆகவே அது எல்லாம் ஆவிக்குரிய வாழ்வின் ஒருபகுதிதான். அது முக்கியமான இடத்திற்கு வரகூடாது நான் விரும்பினதை கர்த்தர் தந்துவிட்டார் என்பதற்காகவோ, உங்களுடைய பிரச்சனையை கர்த்தர் தீர்த்து விட்டார் என்பதற்காகவோ, என் சித்தத்தை, என் விருப்பத்தை நிறைவேற்றி விட்டார் என்ற காரணத்தினாலோ, நான் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு வாழ்கிறேன் என்று கூறுவது சரியான, முழுமையான அர்த்தம் அல்ல. அது ஒரு பகுதி, அவ்வளவுதான். ஆனால் அதையும் தாண்டி ஒரு பெரிய காரியத்தை ஓர் வெற்றியுள்ள ஜீவியத்தை குறித்து சாதிக்க இருக்கிறோம். அப்போது வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு என்பது உங்களுடைய சித்தம், விருப்பம், உங்கள் பிரச்சனை தீர்க்கப்பட்டதைப் பற்றி மட்டும் கூறுகிற விஷயம் அல்ல என்பதனை புரிந்து கொள்வீர்கள். சிலர் ஒரு வேலை கூறுகிறார்கள், ஊழியத்தை குறித்து சிலர் இவ்விதமாய் சொல்ல கூடும். மிகவும் கடினமான இடத்திலே ஊழியம் செய்து விட்டதினாலே ஒரு வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வை நடத்திவிட்டதாக கூறுகிறார்கள். அதுவும் ஒரு பகுதிதான். இவ்வாறு இவையெல்லாம் தேவன் தருகிற சிறிய, சிறிய வெற்றிகள். ஆனால் நீங்களும், நானும் நடத்த போகிற ஒரு வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வை குறித்து சிந்திக்க போகிறோம். சிலர் நினைக்கிறார்கள். ஒரு பணக்காரனாக மாறுவதை ஓர் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வாக கருதுகிறார்கள். நான் மிகவும் ஏழையாக இருந்தேன், கர்த்தர் இடத்தில் வந்தேன், கர்த்தர் என்னை பெரிய பணக்காரனாய் என் கிராமத்திலே, என்னுடைய ஊரிலே வைத்துவிட்டார் என்று சொல்கிறது பெரிய வெற்றியுள்ள கிறிஸ்த வாழ்வு என்று சொல்லுகிறார்கள்.

பிரியமானவர்களே, இதுவும் ஓர் பகுதிதான். நான் செய்கிறது எல்லாம் வாய்க்கிறது, காரியசித்தி பெற்று வாழ்கிறேன். ஆகவே வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வை நடத்துகிறேன் என்று சொல்வது தவறான ஓர் நினைவு ஆகும். சிலர் நினைக்கிறார்கள், சமுதாயத்தில் உயர்ந்த இடத்தை பெற்று விட்டேன், முன்பு சமுதாயத்தில் தாழ்ந்த இடத்தில் இருந்தேன், கர்த்தரிடத்தில் வந்தேன், என்னை

கீர்த்தியும், புகழ்ச்சியுமாக மாற்றி உயர்ந்த இடத்தில் வைத்துவிட்டார். எங்கள் ஊரில் மதிக்கத்தக்க இடத்தில் வைத்துவிட்டார். கிறிஸ்தவ வட்டாரத்திலேயே ஓர் மதிக்கத்தக்க இடத்தில் வைத்துவிட்டார் என்று கூறுவது ஓர் முழுமையான அர்த்தம் அல்ல. சிலர் உங்களை பார்த்து நீங்கள் வெற்றியுள்ள வாழ்வை நடத்துகிறீர்களா? என்று கேட்கும்போது, ஆம்! கர்த்தர் எங்களை ஆசீர்வதிக்கிறார், நாங்கள் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வை நடத்துகிறோம் என்று சொல்லுகிறது முழுமையான அர்த்தத்தை தரவில்லை.

பிரியமானவர்களே, அப்பொழுது நாங்கள் கூறுகிறதை, நீங்கள் தவறு என்று கூறுகிறீர்களோ என்று கேட்கலாம். சகோதரனே, இவைகளெல்லாம் தவறு என்று சொல்லவில்லை. இவையெல்லாம் வெற்றியின் ஒரு பகுதிதான். அது வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு என்ற முழுமையான அர்த்தத்தை குறித்துவிடாது. கர்த்தருடைய சித்தத்தின்படி வாழ்ந்து அவருடைய நாம் மகிமைக்கென்று வாழ்ந்து அவருடைய சித்தத்தையெல்லாம் செய்து முடித்து அவற்றை முழு திருப்தியோடு செய்து முடித்தேன் என்று சொல்லுகிற இடத்தில்தான் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு இருக்கிறது, இயேசு கிறிஸ்து இந்த உலக வாழ்விலே தன் ஊழியத்தை முடித்துவிட்டு செல்லும்போது இவ்விதமாய் சொல்லுகின்றார். யோவான் 17:4, “பூமியிலே உம்மை நான் மகிமைப்படுத்தினேன், நீர் செய்யும்படி நியமித்த கிரியையை நான் செய்து முடித்தேன்” என்று இயேசு சொல்கிறார். இயேசு மரிக்கும்போது வாழ்வின் முடிவின் தருவாயில் கூறுகின்றார். மாம்சத்தில் வாழ்ந்த நாள்களின் இறுதிப்பகுதியிலே கூறுகின்றார். பிதாவே, பூமியிலே உம்மை மகிமைப்படுத்தினேன். எப்படியெனில், பூமியிலே எத்தனை ஊழியங்கள் எனக்கு செய்யும்படி வைத்திருந்தீரோ, அத்தனை காரியங்களையும், கிரியைகளையும் செய்து முடித்து உம்மை மகிமைப்படுத்தினேன். இப்பொழுது உம்மிடத்தில் வருகிறேன் என்று சொல்லுகிறது தான் இந்த வசனம். நீங்களும், நானும் இப்படிப்பட்ட ஓர் இடத்திற்கு வரவேண்டும் என கர்த்தர் விரும்புகிறார். நாம் பூமியிலே தேவனை மகிமைப்படுத்த அவர் விரும்புகிறார். அவர் உங்களுக்கு என்று என்ன நியமித்து இருக்கிறாரோ, அதை செய்கிறவர்களாயும் இந்த பூமியிலே அவைகளை முழுமையாக செய்து முடித்து கடந்து போகிறவர்களாய் வாழ்வதுதான் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு. தேவன் உங்களுக்கு சில காரியங்களை நியமித்து இருக்கிறார் என்பதை மறந்து போகாதீர்கள். நம்மில் சிலர்

நினைக்கிறோம், நாம் இஷ்டம்போல வாழ்வதற்கு அழைக்கப்பட்டிருக்கிறோம். நான் ஏதாவது தொழில் செய்யவேண்டும், ஏதாவது பணிபுரிய வேண்டும், அதில் ஆசீர்வாதம் பெறவேண்டும், பிள்ளைபெற்று எடுக்கவேண்டும். அவர்களை வாழ வைக்கவேண்டும். நல்ல படிக்க வைக்கவேண்டும். நல்ல வேலையில் வைக்கவேண்டும். நல்ல திருமணம் முடித்து வைக்கவேண்டும். நமக்கு வயதான பிறகு மரித்து விடவேண்டும் என்பதுதான் நம்முடைய வாழ்க்கை என்று நினைக்கிறார்கள். அது அல்ல, அப்படிபட்ட வாழ்வை மாத்திரம் கிறிஸ்து உங்களுக்கு, எனக்கு நியமிக்க வில்லை. இவையெல்லாம் இரண்டாம் இடத்தில் உள்ளது.

முதலாவது, கர்த்தருக்காக, அவர் சித்தத்திற்காய் வாழ்கின்ற வாழ்க்கை. அவற்றில் சிலகாரியங்களை செய்ய வேண்டும் என கர்த்தர் நியமித்து இருக்கின்றார். அதை செய்து முடித்தவர்களாய், நீங்களும், நானும் இந்த உலகத்தை விட்டு கடந்து செல்ல வேண்டும் என்பதுதான் தேவன் எதிர்பார்க்கின்ற வாழ்வு. எபேசியர் 2:10ல் இந்த காரியத்தை தெளிவாக பார்க்க முடிகிறது. என்னவெனில், நற்கிரியைகள் செய்வதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம். அவைகளிலே நாம் நடக்கும்படி முன்னதாக அவைகளை ஆயத்தம்செய்து இருக்கிறார் என்பதை நாம் வாசிக்கின்றோம். நல்ல கிரியைகளை அதாவது, உலகிலே நல்ல கிரியைகளை செய்வதற்கு கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு இருக்கிறோம். அது தேவனுடைய செய்கையாய் இருக்கிறது. அதை தேவன் செய்கிறவராய் இருக்கிறார். இதை எப்படி செய்தார். இவைகளில் நடக்கும்படி முன்னதாக நமக்கு ஆயத்தம்பண்ணி இருக்கிறார்.

அதாவது நீங்களும், நானும் பிறக்கும் முன்னரே, உலகத்தோற்றத்திற்கு முன்னரே இப்படி திட்டம்பண்ணி இருக்கிறார். நீங்கள் இந்த நற்கிரியை செய்ய வேண்டும் என முன்னதாக ஆயத்தம் பண்ணியிருக்கிறார் என வசனம் சொல்லுகிறது. நீங்கள் செய்யவேண்டியதை பிதாவானவர் முன்பே திட்டமிட்டு உள்ளார். அதை பூமியிலே நீங்கள் நிறைவேற்ற வேண்டும். இதுதான் அவர் திட்டம். அவற்றை செய்து முடித்தவர்களாக, தேவனுடைய திட்டப்படி, சித்தப்படி வாழ்வதுதான் முற்றிலும் நிறைவேற்றினவர்களாய் கடந்து போகிறதுதான் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு. அப்போது தேவனுடைய சித்தப்படி வாழ்வது

மட்டுமல்ல, கிறிஸ்தவ வாழ்வு - தேவனுடைய சித்தம் என்மீது முற்றிலுமாய் விளங்குகிற வாழ்வின் பெயர்தான் அவர் சித்தம் செய்கிற வாழ்வு, வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு. முற்றிலுமாய் கிறிஸ்துவுக்குள் ஜெயம் பெற்ற வாழ்வு என்று தேவன் கூறுகிற காரியம். இதுதான் தேவனுடைய சித்தத்தை அறிந்து செய்கிற காரியம் அல்லது கிறிஸ்தவ வாழ்வு. முழுமையாய் தேவ திட்டத்தை தேவன் உங்கள் மீது வைத்து உங்களைக் கொண்டு நிறைவேற்றி, முடிப்பதுதான் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு. 1 கொரி.15:54-57 வசனங்களை வாசிக்கிறேன், "அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும். மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்." என்று வாசிக்கிறோம். இது நம்முடைய உயிர்த்தெழுதலை குறித்த காரியமாய் இருந்தாலும், நமக்கு இப்பொழுது ஜெயம் கொடுக்கிற சிலவற்றை உள்ளடக்கியதாய் இருக்கிறது என்று ஆழமாய் சிந்திக்கும்பொழுது புரிந்து கொள்ள முடியும். இயேசு கிறிஸ்துவின் மூலமாய் தேவன் நமக்கு இந்த ஜெயத்தை தருகின்றார். எப்படிப்பட்ட ஜெயம் இல்லாவிட்டால், இதிலே உள்ள காரியங்கள் என்ன? முதலாவது நாம் தெரிந்து கொள்ள வேண்டிய காரியம், யார் வெற்றி தருகிறவர், ஜெயம் தருகிறவர்? தேவன் ஜெயம் தருகிறவர். எனவே 57-வது வசனம் சொல்கிறது, ஜெயம் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். ஜெயம் தேவனிடத்தில் இருந்து வருகிறது. நாம் குதிரையை யுத்த நாளுக்காய் ஆயத்தப்படுத்துவோம், ஆனால் ஜெயமோ கர்த்தரால் வருகிறதாய் இருக்கிறது. ஆகவே வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வுக்கு அடிப்படை தேவன்தான். வெற்றியுள்ள வாழ்வுக்காய் நீங்கள் போடுகிற திட்டம் அடிப்படை அல்ல. "தேவனதான் அடிப்படை" நாம், ஒருவேளை வெற்றி பெற ஒன்றும் தெரியாமல் இருக்கலாம், பேதையான யாரும் திசைகெட்டு போவதில்லை என கர்த்தர் சொல்லுகிறார். உங்களுக்கு ஒன்றும் தெரியாமல் இருக்கலாம், வெற்றிபெற்ற வாழ்வை எப்படி வாழமுடியும?. எங்களுக்கு ஒன்றும் தெரியாதே, அவைகளைப்பற்றி ஒன்றும் பிரச்சனை இல்லை, உங்களுடைய திட்டத்தினால் இல்லை, வெற்றி தேவனால் வருகிறது. வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வுக்கு

அடிப்படை திட்டம் அல்ல. உங்கள் படிப்பு இல்ல, உங்கள் திறமை அல்ல, உங்களுடைய செல்வமும் அல்ல, உங்களது சூழ்நிலையும் அல்ல. தேவன் தான் வெற்றிக்கு காரணராய் இருக்கிறார். இயேசுகிறிஸ்வின் மூலமாய் தேவனிடத்தில் இந்த வெற்றியை கண்டு பிடிக்கிறோம்.

அடுத்து இரண்டாவது காரியம், இந்த வேதபகுதியிலே பவுல், எப்போது இந்த வெற்றி சாத்தியம் என்று கூறுகின்றார் என்பதை கவனியுங்கள். 1 கொரி.15:54ம் வசனம் கூறுகிறது, “அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவான இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, இந்த ஜெயம் தேவனால் நமக்கு அருளப்படுகிறது. முதலாவது கூறினதுபோது, தேவன்தான் உங்கள் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை காரணர் அவர்தான் என்று பவுல் இங்கு கூறுகிறார் என்று உங்களுக்கு தெரியுமா? அழிவுள்ளதாகிய இது அழியாமையை தரித்துக்கொள்ளும்போது, சாவுக்கேதுவாகிய இது சாவாமையை தரித்துக்கொள்ளும்போது ஜெயம் தேவனால் நமக்கு கொடுக்கப்படுகிறது.

அதாவது நீங்களும், நானும், அழிவுள்ள சரீரத்தை உடையவர்கள், அழிவுள்ள வாழ்வை உடையவர்கள். இந்த அழிவுள்ள வாழ்வு அழியாமையை தரித்துக்கொள்ளும்போது, அழியாமை யார்? இயேசுகிறிஸ்து. அதைத்தான் சொல்லுகிறார் நித்தியஜீவன் என்று. அந்த ஜீவன் நித்திய நித்தியமானது, அப்போது உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவின் அந்த வல்லமை அழிவுள்ளதாகிய இந்த சரீரத்தில் வரும்போது, தரித்துக்கொள்ளும்போது, ஜெயம் பெறுகிறதாய் இருக்கிறது. இந்த சரீரம் சாவுக்கு ஏதுவானது. ஆனால் இயேசு கிறிஸ்து சாவாமை உள்ள தேவன். அவரிடம் சாவாமை இருக்கிறது அதுதான் நித்திய ஜீவன். நாம் சாவாமையை தரித்துக்கொள்ளும்போது ஜெயம் உண்டாகிறது. இந்த உலகத்திலே இப்படித்தான் இருக்கிறோம். ஆனால் அந்த உயிர்த்தெழுந்த இயேசுவின் அந்த அழியாமை உங்கள் மீது, என் மீது வரும்போது, ஜெயம் பெற்ற வாழ்வை நடத்த முடியும். சாவுக்கேதுவான சரீரத்தை உடைய நீங்களும், நானும் இயேசுகிறிஸ்துவை தரித்துக்கொள்ளும்போது ஜெயம் சாத்தியமானதாய் இருக்கிறது. அநேக காரியங்களை நாம் சிந்திக்க இருக்கிறோம். ஆனால் அடிப்படை காரியத்தை நான் பேசிக்கொண்டு இருக்கிறேன். உங்கள் வாழ்வு ஜெயம் உள்ளதாய் மாற நிச்சயமாய் சாத்தியம் இருக்கிறது. இதுவரை நீங்கள்

தோல்வியான வாழ்விலே வாழ்ந்து விட்டீர்களா? தேவன் உங்கள் வெற்றிக்கு காரணராய் இருக்கிறார்.

அடுத்து அழிவுள்ள உங்கள் சரீரம் அழியாமையை தரித்துக்கொள்ளும்போது சாவுக்கேதுவான சரீரம் சாவாமையைத் (இயேசுவை) தரித்துக்கொள்ளும்போது, வெற்றி உங்களில் வருகிறதாய் இருக்கிறது. இயேசுகிறிஸ்து உங்களை முதலில் ஜெயம்கொள்ள வேண்டும். இரட்சிக்கப்பட்டுவிட்டால் இந்த ஜெயம் வந்து விடாது. ஏனெனில் இந்த உலகில் ஏகப்பட்ட போராட்டங்கள், நமக்கு எதிரான யுத்தங்கள், பிரச்சனைகள், பிசாசு வைத்திருக்கிற தந்திரங்கள், உலகத்தின் மீது, பாவத்தின் மீது போராட்டம். ஆகவே இந்த போராட்டத்தில் எல்லாம் இரட்சிக்கப்பட்ட ஒருவனால் போராடிவிட முடியாது. இயேசுகிறிஸ்து முதலாவது உங்களை மேற்கொள்ள, வெற்றி கொள்ள வேண்டும். உங்கள் சுயம் சாகவேண்டும். நீங்கள் மரித்த இடத்திற்கு செல்லவேண்டும். உயிர்த்தெழுந்த இயேசு உங்களில் வாழவேண்டும். இயேசுகிறிஸ்து உங்கள் வாழ்வில் ஆண்டவராய் மாறும்போது நீங்கள் வெற்றியாய் வாழமுடியும். சுருங்க சொல்லவேண்டுமெனில், நீங்கள் எந்த காரியத்தின் மீதும் ஆளுகை செய்ய முடியாது. எது மீதும் உங்களுக்கு அதிகாரம் இருக்காது. ஆனால் இயேசுகிறிஸ்து உங்கள் மீது அதிகாரம் உடையவராய் மாறும்போது, அதற்கு பின்பு எல்லா சூழல் மீதும் உங்களுக்கு அதிகாரம் உள்ளதாய் இருக்கிறது. எல்லாவற்றின் மீதும் உங்களுக்கு அதிகாரம் கிடைக்ககூடியதாய் இருக்கிறது. நீங்கள் இயேசுகிறிஸ்துவின் பிள்ளை என்பதினால் காரியசித்தி உள்ளவர்களாய் மாறுகிறீர்கள். நீங்கள் செய்வதெல்லாம் வாய்க்கிறது.

முன்புவரை எதைசெய்தாலும் கரியாக போகிறது என்று சிலர் சொல்லுகிற வாழ்வு சிலருக்கு இருக்க கூடும். ஆனால் இயேசுவினிடத்தில் வரும்போது, அவர் உங்களை மேற்கொள்ளும்போது, நீங்கள் உங்களை ஜெயிக்கிறவர்களாய், இந்த சரீர வாழ்விலே ஜெயம் பெற்றவர்களாய் வாழ்ந்து, சுதந்தரித்து வாழ்ந்து மேன்மைப்படுவீர்கள். மரணத்தின் மீது வாழ்வு ஜெயம் கொள்கிறதாக இருக்கிறது என்று பவுல் எழுதுகிறார். அதைத்தான் சற்று உங்களுக்கு வாசித்து காண்பித்து கொண்டு இருந்தேன். 1 கொரி.15:54-57ல் உள்ள வசனங்களை உங்கள் வேதத்தில் எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். அதைதான் சுற்றி, சுற்றி விளக்கம் கூறிக்கொண்டு இருக்கிறேன். அடுத்த பகுதிக்கு கடந்து செல்ல இருக்கிறேன்.

மரணத்தின் மீது வாழ்வு வெற்றிகொள்ள வேண்டும். உங்களுடைய அழிவுள்ள சரீரம் அழியாமையை தரித்துக்கொள்ளும்போது நீங்கள் வெற்றியுள்ள வாழ்வை பெறுவீர்கள்.

நீங்கள் கிறிஸ்துவில் வாழ்வை, ஜீவனை பெற வேண்டும் என்றால், நீங்கள் உங்கள் வாழ்வை இழக்க வேண்டியதாய் இருக்கும். என் நிமித்தம் தன் ஜீவனை இழந்து போகிறவன், அதை பெறுகிறவனாய் இருக்கிறான். நானே வெற்றியுள்ள வாழ்வைப் பற்றி சிந்தித்துக்கொண்டு இருக்கும்போது, நீங்கள் சொல்லுகிறீர்கள், உன் வாழ்வை இழந்துவிடு, இயேசுகிறிஸ்துவின் வாழ்வை வாழ்ந்து விடு. அப்பொழுது ஜெயம் பெறுவாய் என்று சொல்லுகிறீர்களே. சற்று வித்தியாசமாய் இருக்கிறது என்று நீங்கள் நினைக்கலாம். உங்கள் திட்டங்களை கைவிடுங்கள். உங்கள் சாதுரியமான திட்டங்கள், தந்திரமான திட்டங்கள், குறுக்குவழி திட்டங்கள், அதைப்போல உங்களுக்காக வாழ்கிற வாழ்வு ஆகியவற்றை விட்டுவிடுங்கள். இயேசுவண்டை வந்து உங்களை நீங்களே மறந்துவிடுங்கள். சுயத்தை வெறுத்து விடுங்கள். இது கொஞ்சம் கடினமான காரியம்தான். ஆனால் இயேசுவின் வாழ்வை வாழும்போது மிக மிக எளிதாக இந்த வெற்றியை பெற்று வாழ முடியும். இது மிகவும் ஆச்சரியமான அனுபவம். எங்கள் வாழ்வில் அனுபவித்து பார்த்துக்கொண்டுதான் சொல்லுகிறோம்.

பிரியமானவர்களே உங்கள் வாழ்வை இழந்து விடுங்கள். இயேசுவுக்குள்ளாய் உங்கள் வாழ்வை வாழ உங்களை ஒப்புக்கொடுங்கள். அதற்குப்பெயர்தான் வெற்றியுள்ள வாழ்வு. நீங்கள் எல்லாவற்றின் மீதுள்ள கட்டுப்பாட்டை இழந்துவிடுங்கள். விட்டுவிடுங்கள். விசுவாசத்தினால் தேவனுடைய கரத்தில் விழுந்துவிடுங்கள். அவ்விதமாக நீங்கள் சுயத்திற்கு சாகும்போது நீங்கள் தேவனுக்காய் வாழ முடியும். அதைத்தான் பவுல் அழகாக எழுதுகிறார். கலாத்தியர் 2:20 வசனத்திலே பவுல் அழகாக கூறுகிற காரியம் இதுதான், கிறிஸ்துவுடனே சிலுவையில் அறையப்பட்டேன், ஆயினும் பிழைத்திருக்கிறேன், இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார், நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புகொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைததிருக்கிறேன், என்று எழுதுகிறார். அதாவது நான் அல்ல என்பதற்கு ஈகோ என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டு இருக்கிறது. சுயம் அல்ல, கிறிஸ்துவே

என்னில் பிழைத்து இருக்கிறார். ஆம் பிரியமானவர்களே இந்த இடம் உங்களுக்குள் வரவேண்டும். உங்களுடைய சுயம் அல்ல, உங்களுடைய ஈகோ அல்ல. கிறிஸ்துவே உங்களுக்குள் பிழைத்து இருக்கிற அனுபவத்துக்குள் வரும்போது அவர் உங்களை மேற்கொண்டு விடுகிறார். உங்கள் மீது ஜெயம் பெற்று விடுகிறார். இப்பொழுது உங்கள் மீது அவருடைய ஆளுகை வருகிறது. உங்கள் வாழ்வு அவருடைய கட்டுப்பாட்டுக்குள் வருகிறது. ஏனென்றால் நீங்கள் சுயத்திற்கு மரித்துவிட்டீர்கள். இப்போது கிறிஸ்துவே உங்களுக்குள் பிழைத்து இருக்கிறார். அவரை பற்றும் விசுவாசத்தினால் பிழைத்து இருக்கிறீர்கள். இப்போது எல்லா சூழ்நிலையும் உங்கள் கட்டுப்பாட்டில் வருகிறது. நீங்கள் ஜெயம் பெற்ற இடத்திற்கு வருகிறீர்கள். இதுதான் அடிப்படையான ஓர் காரியம் அடிப்படையான சத்தியம். பவுல் சொல்லுகிறார், மரணமே உன்கூர் எங்கே, பாதாளமே உன் ஜெயம் எங்கே என்று வெற்றி முழக்கம் இட முடியும். மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பலன் நியாயப்பிரமாணம். இந்த இடத்திலே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை நமக்கு ஜெயம் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று நீங்கள் உணர்வீர்கள். பிரியமானவர்களே இந்த ஆழமான சத்தியத்திலான அனுபவம் உங்கள் வாழ்க்கையிலே வரும்போது தேவனே உங்களுக்கு வெற்றி தருகிறவராய் மாறுகிறார்.

உங்களுடைய அழிவுள்ள சரீரம் அழியாமையை தரித்துக்கொள்ளும்போது நீங்கள் இந்த மரணமான வாழ்விலிருந்து விடுபட்டு ஜீவனான வாழ்வை வாழ்வீர்கள். அது பரிபூரணமான ஜீவனுள்ள வாழ்வாக இருக்கபோகின்றது. இதுதான் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு.

தேவனுடைய வாழ்விற்காக நம்முடைய சுயத்தை இழக்க வேண்டும். வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வைப் பற்றியதான அநேக போதனைகள் இந்த நாட்களிலே போதிக்கப்பட்டலும் - அவைகள் முழுமையானவைகளானதாக இல்லை என்பதனையும் சரியான வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வை பற்றியதாக இருக்கவில்லை என்பதனையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். பணம், வீடு, ஆஸ்தி, இவைகள் ஆசீர்வாதங்கள்தான் இல்லையென்று மறுப்பதற்கில்லை. ஆனால் கிறிஸ்தவ வாழ்வின் ஜெயம் என்பதை பற்றி நாம் சரியான தெளிவுடையவர்களாக இருக்க வேண்டும்.

நம்முடைய சுயமான வழி, நம்முடைய சுயமான சித்தம், நம்முடைய சுயமான வாழ்வு ஆகிய இவைகளை விட்டு விட்டு தேவனுடைய சித்தத்திற்காக நம்மைநாமே முழுமையாக விற்றுப்போட வேண்டும், முழுமையாக அர்ப்பணிக்க வேண்டும் என்பதை நாம் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும்.

நாமனைவரும் கிறிஸ்து இயேசுவின் விலையேறப்பட்ட இரத்தத்தினால் கிரயத்துக்கு கொள்ளப்பட்டவர்கள். கிறிஸ்து இயேசு இரத்தத்தை விலைக்கிரயமாக கொடுத்து நம்மை வாங்கியுள்ளார். ஆகவே நாம் நமக்கானவர்கள் அல்ல. கிரயம் கொடுத்து வாங்கினவருக்கு உரியவர்கள். ஆகவே, நம்முடைய சித்தத்தை, நம்முடைய வாழ்வின் காரியங்களை, வாழ்வின் மேன்மைகளை, உலகத்திற்காக வாழ்கிற வாழ்க்கையை விட்டுக்கொடுத்து, கர்த்தாவே உம்முடைய சித்தத்திற்காக வாழ, உம்முடைய சித்தம் செய்ய என்னை அர்ப்பணிக்கிறேன் என்று நம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

திருமணத்தில் இணைக்கப்படுகிற புருஷனும், ஸ்திரீயும் எவ்விதமாக வாக்குக்கொடுத்து தங்களை ஒருவருக்கொருவர் ஒப்புவிக்கிறார்களோ அவ்விதமாக வாழ்விலும், தாழ்விலும், எல்லா சூழ்நிலைகளிலும் உமக்காக உம்முடைய சித்தம் செய்ய என்னை அர்ப்பணிக்கிறேன் என்று தேவனிடம் உங்கள் வாழ்வை ஒப்புகொடுக்கும்போது உண்மையான வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு வாழ ஆரம்பிக்கிறீர்கள்.

நம்முடைய சுயம் தேவனுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டு, தேவசித்தமே முக்கியமான இடம் பெறுகிறதுதான் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு.

நமக்கு ஆயிரம் விருப்பங்களும், சித்தங்களும் இருந்தாலும் என்னுடைய சித்தம் அல்ல, உம்முடைய சித்தமே நிறைவேறட்டும் என்று தேவனிடம் ஒப்புகொடுப்பதுதான் சுயத்திற்கு மரிப்பது என்பதாகும். தேவன் தம்முடைய சித்தத்தின்படி நமக்கு தருகிறவைகளை முறுமுறுப்பில்லாமல் ஏற்றுக்கொள்ளவும் நாம் ஆயத்தமுள்ளவர்களாய் இருக்கவேண்டும். நம்முடைய வாழ்விற்கு எது நலம் என்று கர்த்தர் கருதுகிறாரோ அதைத் தருகிறார். நம்முடைய வாழ்வின் உள்ளான மற்றும் வெளிப்புறமான எல்லா நடவடிக்கைகளையும் கர்த்தர் ஆளுகை செய்து நமக்குள்ளே பொறுமையையும், தம்முடைய சித்தத்திற்கு ஏற்ற கிரியைகளையும் நாம் செய்வதற்கும் வேண்டியதான அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ந்து செய்துகொண்டே இருக்கின்றார். தேவனுடைய சித்தத்திற்காக நம்மை

முழுவதுமாக அர்ப்பணிக்கின்றபோது நம்முடைய ஜெபவாழ்க்கையில் அபரிவிதமான மாற்றங்கள் ஏற்படுகிறதை நம்மில் காணமுடிகிறது.

தேவனுடைய சித்தத்திற்கு நம்மை முழுவதுமாக ஒப்புக்கொடுக்கும்போது நம்முடைய வாழ்வு கர்த்தருடைய ஆளுகைக்குள் இருக்கின்றது என்கிறதான மேலான நம்பிக்கை நமக்கு உண்டாகிறது. கர்த்தருடைய ஆளுகைக்குள்ளான என்னுடைய வாழ்வில் தேவன் சகலவற்றையும் நம்மைக்கேதுவாகத்தான் நடப்பிக்கின்றார் என்ற நம்பிக்கை அனுதினமும் நம்மில் பெருக துவங்குகின்றது. இது வெற்றியுள்ள கிறிஸ்தவ ஜீவியத்தின் சிறப்பான அடையாளம் என்றால் அது மிகையாகாது.

அநேக தவறான உபதேசங்களினால் நாம் வாழ்கிற வெற்றியுள்ள கிறிஸ்தவ ஜீவியம் சந்தேகப்பட கூடிய நிலைக்கு செல்கின்றதையும் நாம் உற்றுநோக்க வேண்டும். காலாகாலமாக இதுதான் வெற்றியுள்ள கிறிஸ்தவ ஜீவியம் என்று கேட்டு அதன்படி வாழ்ந்து பழகிவிட்ட நமக்கு, கிறிஸ்துவுக்குள் சரியான வெற்றியுள்ள வாழ்வு என்ன என்பதனைப் பற்றிய போதனை பெரிய தடுமாற்றத்தைக் கூட ஏற்படுத்திவிடலாம். ஆகவே வேதவசனங்களின் அடிப்படையில் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வின் போதனைகளை நிதானிக்கிற அளவிலே நமக்கு போதுமான வேத அறிவு வேண்டியதாயிருக்கிறது. இப்படி இல்லாத பட்சத்திலே நாம் தவறிப்போய்விடுவதற்கும் ஏராளமான வாய்ப்பு இருக்கின்றது என்பதனை உணர்ந்து கொள்ளுங்கள்.

தேவன் தம்முடைய சித்தத்தின்படியே நமக்குள்ளே விருப்பத்தையும் செய்கையையும் உண்டாக்குகிறவராக இருக்கின்றார். நம்முடைய சுயமான விருப்பங்களை நிறைவேற்ற வேண்டிய கட்டாயத்தில் தேவன் இல்லை என்பதை புரிந்துகொள்ளுங்கள்.

தேவனுடைய விருப்பமே நம்முடைய விருப்பமாக மாறுவதுதான், நீதிமான் விரும்புகிற காரியம் அவனுக்கு கொடுக்கப்படும் என்ற ஆசீர்வாதம் என்பதனை தெளிவுபடுத்திக்கொள்ளுங்கள்.

நம்முடைய சித்தம், நம்முடைய எண்ணம், நம்முடைய விருப்பம் இவைகளிலெல்லாம் மாற்றம் ஏற்பட்டு அந்தந்த இடங்களில் தேவனுடைய சித்தம், தேவனுடைய எண்ணம், தேவனுடைய விருப்பம் வந்துவிட வேண்டும்.

நீதிமான என்பவன் யார்? தேவனுடைய சித்தமும், எண்ணமும், விருப்பமும் உடையவனாய் தேவனுடைய நீதியை வெளிப்படுத்துகிறவன். இப்படிப்பட்டவன் விரும்புகிற காரியம் அவனுக்கு கொடுக்கப்படும்.

நீதிமானுடைய சித்தம் தேவனுக்கு இசைந்ததாகவும், தேவனுடைய சித்தத்தோடு இணைந்ததாகவும் இருக்கும் என்பதிலே சந்தேகமேயில்லை. நீதிமானின் விருப்பம் தேவனுடைய விருப்பமாகவே இருக்கின்றபடியினால் அவன் விரும்புகிற காரியம் அவனுக்கு கொடுக்கப்படுகிறது என்பதனை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

நம்மூலமாய் தேவன் தம்முடைய சித்தத்தை நிறைவேற்ற நமக்குள்ளும் நம்மைக்கொண்டும் வல்லமையான காரியங்களை நடப்பித்துக்கொண்டிருக்கிறார். தேவன் எதை விரும்புகிறாரோ அதுவே நம்முடைய விருப்பமாகவும், தேவன் சிந்திக்கிறவண்ணமாகவே நாமும் சிந்திக்கக்கூடிய நிலையிலே நம்முடைய சிந்தனையும் மாற்றமடைகிறதென்பது எத்தனை பாக்கியமான அனுபவம்.

என் நாமத்தினாலே நீங்கள் எதை கேட்டாலும் அதை நான் செய்வேன் என்று நம்முடைய ஆண்டவர் கூறுகிறதின் அர்த்தத்தை நாம் நன்கு விளங்கிகொள்ள வேண்டும். போலீஸ்காரரிடம் சென்று “சாராயம்” எங்கே கிடைக்கும் சொல்லுங்கள் என்று கேட்க முடியுமா? முடியாதல்லவா!

நம்முடைய இயேசுகிறிஸ்துவின் நாமம் பரிசுத்தமான நாமம், இரட்சிக்கிற நாமம், விடுவிக்கிற நாமம். இப்படியாக அவருடைய நாமத்துக்கு ஏற்றவைகளை, அவருடைய நாமத்திற்குள்ளாக இருக்கிறதான அவருடைய சித்தத்திற்கு ஏற்றவைகளை நாம் கேட்கின்றபொழுது நாம் எதைக்கேட்டாலும் அதை அவர் செய்கிறவராக இருக்கின்றார்.

தேவனுடைய விருப்பத்தையும், சித்தத்தையும் உடையவர்களாக நாம் எவைகளை கேட்கிறோமோ அவைகள் நமக்கு செய்யப்படும். இவ்விதமாக நாம் கிறிஸ்துவுக்கு வெற்றியுள்ள ஆவிக்குரிய ஜீவியம் செய்கிறவர்களாக ஆசீர்வதிக்கப்படுகின்றோம்.

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து சீஷர்களுக்கு ஜெபிக்க கற்றுக்கொடுக்கும்போது, “பிதாவே, உம்முடைய நாம் பரிசுத்தப்படுவதாக, உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே

செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்று கற்றுக்கொடுத்திருக்கிறதை நாம் அறிந்திருக்கிறோம். தேவனுடைய சித்தம் இந்த பூமியிலே செய்யப்படுவதற்கு நாம் கருவிகளாக காணப்படவேண்டும் என்பதற்காகதான் கர்த்தர் நம்மையும் அவ்விதமான வாஞ்சையோடு ஜெபிக்க சொல்லுகின்றார். தேவனால் தெளிவாகவும், வெளிப்படையாகவும் இவைகள் நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதை எண்ணி நாம் கர்த்தரை அதிகமாக துதிக்க வேண்டும்.

"பூமியிலே உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக" இப்படியாக தேவனிடம் நீங்களும், நானும்தான் கேட்கின்றோம். ஆகவே பூமியிலே தம்முடைய சித்தம் நிறைவேற கர்த்தர் நம்மை வல்லமையாய் உபயோகிப்பார் என்பதில் சந்தேகமேயில்லை.

தேவன் பரலோகத்திலே கட்டளைகளையும், குறிப்புகளையும், சில அறிவுறுத்தல்களையும், தகவல்களையும் நமக்கு நேராக அனுப்பும்படி அவர் அங்கே அமர்ந்திருக்கவில்லை. மாறாக, தம்முடைய சித்தத்தை நமக்கு வெளிப்படுத்திக் காண்பிக்கவே தேவன் விரும்புகின்றார்.

நம்முடைய வாழ்வைக் குறித்ததான தம்முடைய விருப்பங்களை, சித்தங்களை, எண்ணங்களை தேவன் நமக்கு வெளிப்படுத்திக் காண்பித்துக்கொண்டே இருக்கின்றார். நாம் அனுதினமும் ஒழுங்கும் கிரமுமாக வேதம் வாசித்து, ஜெபித்து, தேவனைத் தேட, தேட, தம்முடைய சித்தங்களை நமக்கு வெளிப்படுத்தி, அதன்வழியாக நம்மை நடத்தி செல்ல தேவன் ஆவலுடையவராக இருக்கின்றார். அதைத்தான் அவர் செய்கின்றார்.

நாம் தேவனுடைய சித்தத்தோடு இணைந்திருக்கும்போது, தேவனுக்கென்று சரியானவைகளை நேர்த்தியாக செய்கின்றவர்களாக இருப்போம். மாறாக நாம் நம்முடைய சுயமான சித்தத்தோடும், நம்முடைய சுயமான விருப்பங்களோடும் இணைந்திருக்கும்போது, தேவன் அவைகளை நமக்கு சுட்டிகாட்டி நம்மைச் சீர்திருத்தம் செய்யவும் தவறுகிறதில்லை என்பதனையும் நாம் நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும். நாம் நம்முடைய ஜெபங்களுக்கான பதில்களை பெற்றுக்கொண்டதிலிருந்தும் பெற்றுக்கொள்ளாததிலிருந்தும் இதை நன்கு புரிந்துகொள்ள முடியும்.

நாம் கிறிஸ்துவோடுகூட மரித்து அவரோடுகூட எழுந்திருக்கற அனுபவத்தைப் பெறாதவரையிலும் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வுக்கு நேராக நாம் கடந்துவருவதென்பது சாத்தியமில்லாத ஒன்றே! நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தில் நடைபெற வேண்டிய இந்த முக்கியத்துவம் வாய்ந்த அடிப்படையான அனுபவமே, நாம் எல்லாவற்றிலும் ஜெயம் நிறைந்த வாழ்வு வாழ்வதற்கு ஆதாரமானது என்பதனை புரிந்து கொள்ளுங்கள்.

1 யோவான் 5:4-5 - தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்? இங்கே வெற்றியைக் குறித்து யோவான் எழுதுகிறார். "நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்"

வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு வாழ்வதற்கு "நம்முடைய விசுவாசம்" முக்கியமானதாகும். நம்முடைய விருப்பத்தை நாம் பெற்றுக்கொள்வதற்காக அல்ல. நாம் நம்முடைய விசுவாசத்தை கிறிஸ்துவின்மேல் வைப்பதினால், அவர் நம்முடைய ஜீவனுள்ள தேவனாக மாறுகின்றார். நம்மை முழுமையாக ஆளுகை செய்கின்ற ஒரு தேவனாக மாறுகின்றார்.

ஏற்கனவே எல்லாவற்றின்மேலும் வெற்றி பெற்றவராகிய இயேசுகிறிஸ்துவின்மேல் நாம் நம்முடைய விசுவாசத்தை வைத்து அவரோடு உறவுடையவர்களாக இருக்கின்றபடியினாலே நாமும் எல்லாவற்றின்மேலும் வெற்றி பெறுகிறவர்களாக இருக்கின்றோம். நம்மீது முழுமையான ஆளுகை உடையவராகிய அவர் தம்முடைய வெற்றியின் அதிகாரத்தை நமக்குத் தந்து நாம் எல்லாவற்றிலும் எப்போதும் வெற்றிபெறுகிறவர்களாக இருக்கும்படி ஆசீர்வதிக்கின்றார். அவருடைய வெற்றிகள் நம்முடைய வெற்றிகளாகவும் மாறிவிடுகிறது.

உலகத்தை ஜெயிக்கிற ஜெயத்திற்கு நம்முடைய விசுவாசமே அடிப்படையாக இருக்கின்றது. "வெற்றிவேந்தர் இயேசுவின்மேல் நம்முடைய விசுவாசம் இருக்கின்றபடியினால், அவரே நமது ஆண்டவராக இருக்கின்றார். அவரது வெற்றிகள் அனைத்தும் நம்முடைய வெற்றியாக இருக்கிறது.

நம்முடைய ஆவிக்குரிய வாழ்வின் வெற்றி கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கின்றது. நாம் கிறிஸ்துவின்மீது விசுவாசம் வைத்து அவரைப் பின்பற்றுகிறபோது, கிறிஸ்து ஜெயம் பெற்றிருக்கிற அனைத்தின்மேலும் நாமும் ஜெயம் பெறுகிறவர்களாக இருக்கின்றோம். நாம் நம்முடைய வாழ்வை முற்றிலுமாக இயேசுகிறிஸ்துவிடம் ஒப்படைக்கிறபோது இது சாத்தியமாகிறது. நாம் வெற்றிகளை எளிதாக சுதந்தரிக்கிறவர்களாக மாறிவிடுகிறோம்.

நம்மில் அன்புகூறுகிற கிறிஸ்துவினாலே இவையெல்லாவற்றிலும் நாம் ஜெயங்கொள்ளுகிறவர்களாக இருக்கின்றோம். எவைகளை எல்லாவற்றின் மேலெல்லாம் நாம் நம்மில் அன்புகூறுகிற கிறிஸ்துவினாலே முற்றிலும் ஜெயங்கொள்ளுகிறவர்களாக இருக்கின்றோம்?

ரோமர் 8:36-39 - கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூறுகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறொந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்.

இந்த வசனங்களில் காணப்படுகிற அனைத்தின்மேலும் இயேசு வெற்றிபெற்றுள்ளார். அந்த வெற்றியை நம்முடைய வெற்றியாக இயேசு மாற்றுகிறார், அவர்மீது நாம் வைக்கிற விசுவாசத்தின் அடிப்படையிலும், நம்மீது அவர்கொள்கிற அன்பினிமித்தமும் தான். மாத்திரமல்ல, இயேசுவை எஜமானனாகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொண்டு, அவருடைய ஆளுகைக்கும் வழிநடத்துதலுக்கும் நாம் நம்மை முழுமையாக ஒப்புக்கொடுத்துவிட்டபடியினால் அவருடைய வெற்றிகளை நம்முடைய வெற்றிகளாகவும் மாற்றிவிடுகிறார்.

ரோமர் 8:16-17 - நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார்.

நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்.

இந்த வசனங்களிலே நமக்குக் கொடுக்கப்படுகின்ற அதிகாரத்தைக் குறித்து நாம் அறிந்துகொள்கிறோம். "நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கின்றோம்" என்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூட சாட்சிகொடுக்கிறார்.

நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறதினாலே "சுதந்தரருமாமே" என்றும் காண்கிறோம். தேவனுடைய சுதந்தரரும் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமிருக்கிறது எவ்வளவு பாக்கியமான காரியம்.

"கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரர்". பிதாவுக்கு கிறிஸ்துவானவர் எப்படிப்பட்டவரோ, அதைப்போலவே நாமும் என்கிறதான பாக்கியத்தைப் பார்க்கின்றோம். இயேசுவுக்கு நம்முடைய பிதா எவைகளைக் கொடுத்தாரோ, அந்த சுதந்தரங்களை பிதா நமக்கும் தருகிறார், அதைத்தான் "தேவனுடைய சுதந்தரும்" என்கிற வார்த்தை நமக்கு விளக்கம் தருகிறது.

கிறிஸ்துவுடனேகூட கிறிஸ்துவின் வெற்றியை நாம் பகிர்ந்துகொள்கிறோம். கிறிஸ்து இயேசுவுக்கு நம்மை முழுமையுமாக ஒப்புக்கொடுத்து கிறிஸ்துவுடனேகூட நாம் வாழும்போது மாத்திரமே இது சாத்தியமாகிறது என்பதனை நாம் நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

வெறுமனே வார்த்தைகளை மாத்திரம் சொல்லிவிடுவதினால் நாம் வெற்றியை பெற்றுவிட முடியாது. நாம் நம்முடைய வாழ்வை தேவனுக்குள்ளாக வாழும்படி அர்ப்பணிக்காதவரையில் இது சாத்தியமேயில்லை. ஆகவேதான் "தேவனுக்கு கீழ்படிந்திருந்ங்கள், பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்" என்று வசனத்தில் வாசிக்கின்றோம்.

நாம் தேவனுக்கு கீழ்படிந்து பிசாசுக்கு எதிர்த்து நிற்கும்போது பிசாசின்மீது வெற்றியை பெற்றுக்கொள்ள முடியும். நாம் நம்முடைய சுயசித்தத்திற்கு இடங்கொடாமல் தேவனுக்கு கீழ்படிகிற அனுபவத்தோடு, உலக வாழ்க்கை சம்பந்தமானவைகளிலும், ஆவிக்குரிய காரியங்களிலும் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த வாழ்வு வாழ்வதினால், கிறிஸ்துவோடுள்ள உறவிலே வெற்றியுள்ள வாழ்வு வாழ

முடியும், கிறிஸ்துவின் சித்தத்தை நிறைவேற்றுகிறதில் வெற்றியுள்ள வாழ்வு வாழ முடியும்.

தேவன் நம்மைக்கொண்டு எவைகளையெல்லாம் செய்யும்படி திட்டமிட்டுள்ளாரோ அவைகளையெல்லாம் செய்வதற்கான பெலனையும் சத்துவத்தையும் பெற்றுக்கொள்கிற நிலைக்கு வந்து விடுகிறோம்.

தேவனோடு வாழ்கிற வாழ்க்கை ஆச்சர்யமும், அதிசயமுமான பாக்கியமான வாழ்வு, மகிழ்ச்சி நிறைந்த ஆசீர்வாதமான வாழ்வு. ஒவ்வொரு நிமிடமும் புதிய புதிய நன்மைகளை அனுபவிக்கிற இடத்திலே இயேசு நம்மை நிறுத்துகிறார். ஆவிக்குரிய வாழ்வு என்பது ஏமாற்றமான மற்றும் பொழுதுபோக்குகிறதான நேரமல்ல, ஒவ்வொரு மணிநேரமும் புதிய புதிய திருப்பங்களும், புதிய புதிய மேன்மைகளும் உண்டாகுகிறதான வாழ்வு.

தேவன் நம்மை ஆளுகைசெய்து நம்மை வெற்றிகொள்ளும்படி நாம் நம்மை ஒப்புக்கொடுக்கும்போது தேவனுடைய வெற்றியை நாம் சுதந்தரித்துக்கொள்ள முடியும். நம்முடைய வாழ்வு தேவனுடைய வாழ்வாக மாறிவிடுகிற நிலைக்கு வரவேண்டும். நாம் அவருடைய கரங்களில் அவருக்கு உபயோகமான கருவியாக இருக்கிறதினாலே அவர்தாம் செய்ய நினைத்திருக்கிறதை நம்மூலமாக செய்கின்றார். அவைகள் அனைத்தும் நன்மைக்கேதுவாக இருக்கின்றன என எரேமியா தீர்க்கதரிசி கூறுகின்றார். தீமையானதாகவோ, தோற்றுப்போகிற காரியமாகவோ அது இருப்பதில்லை.

இயேசுகிறிஸ்துவின் ஆளுகைக்கும், வழிநடத்துதலுக்கும், அவருடைய சித்தத்தை முழுமையாக செய்வதற்கும் வாழ்வை நாம் ஒப்புக்கொடுப்பதற்கு அடிப்படையானவைகள் 1. நாம் இயேசுவின்மீது வைக்கிற நம்முடைய விசுவாசம் 2. இயேசுகிறிஸ்து நம்மீது கொண்டுள்ள அன்பு.

இயேசுகிறிஸ்து உலகத்தின் மீதும், உலகத்திலுள்ள அதிகாரங்கள் மீதும், வானமண்டலங்களில் உலாவுகிற எல்லாவிதமான சேனைகளுக்கு மேலாக, சாத்தானுக்கு மேலாக ஜெயம் பெற்றவர். இயேசுகிறிஸ்துவினுடைய ஜெயம் நம்முடையதாகிறது, நாம் அவர்மேல் வைக்கிற விசுவாசத்தினாலே. வாழ்வின் ஒவ்வொரு பகுதிகளிலும், எல்லா சூழ்நிலைகளிலும் தேவன் சொல்லுகிறதை செய்கிறதற்கு முன்வரும்போது கிறிஸ்துவின் வெற்றி நம்முடைய வெற்றியாக மாறுகின்றது. ஆமென்.

**கேள்விகள்:**

1. வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு என்றால் என்ன என்பதனை நாம் புரிந்துகொள்வதற்கு இப்பாடத்தில் கூறப்பட்ட வேதவசனங்களையும், அவைகளின் விளக்கங்களையும் சற்று விளக்கமாக கூறுக.
2. வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு நமக்குள் எவ்விதமாக வருகிறதென்பதனையும், நமக்குள் எவ்விதமாக வளருகிறதென்பதனையும் அப்போஸ்தலனாகிய பவுலின் வாக்கியங்களிலிருந்து விளக்கமாக கூறுக?
3. நாம் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு வாழ்வதற்கு, தேவசித்தத்திற்கு நம்மை ஒப்புக்கொடுக்கவேண்டியதின் முக்கியத்துவத்தையும் அதனால் நமக்கு உண்டாகிற நன்மைகளையும் கூறுக?
4. நாம் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு வாழ்வதற்கு, "கிறிஸ்துவின் மீதான நம்முடைய விசுவாசம்" மற்றும் "நம்மீதான கிறிஸ்துவின் அன்பு" இவைகளின் பங்களிப்புகள் எவ்விதமானவைகள் என்பதனை வசன ஆதாரங்களுடன் விளக்கமாக கூறுக?